**செ.வெ.எண் :594** **நாள்: 14.09.2021**

**தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ2.94 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சொக்கநாதபுரம், அழகியநாயகிபுரம் மற்றும் செருபாலகாடு ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.09.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் தமிழக அரசு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதன்படி நமது மாவட்டத்தில் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சொக்கநாதபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் லட்சம் மதிப்பீட்டில் சத்திரகுளம் வாய்க்கால் தூர்வாரும் பணினையும், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமான பணியினையும், சொக்கநாதபுரம் ஊராட்சி ஒளிராமன்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 14வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூபாய் 15 ஆயிரம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் காய்கறி தோட்டம் அமைத்தல் பணியினையும் பின்னர் அழகியநாயகிபுரம் ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.36,22,000 மதிப்பீட்டில் 1350 மீட்டர் நீளமுள்ள அழகியநாயகிபுரம்-ஆலடிகாடு இணைப்பு சாலையில் தார் சாலை அமைத்தல் பணியினையும், செருப்பாலகாடு ஊராட்சி நடுவக்குறிச்சி கிராமத்தில் பிரதமர மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் மூலம் ரூபாய் 231.08 லட்சம் மதிப்பீட்டில் 4642 மீட்டர் நீளமுள்ள தார்சாலை அமைக்கும் பணியையும் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்டத்தின் கீழ் ரூ.19,72,000/- மதிப்பீட்டில் செருப்பாலகாடு ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது என்றும் மேற்கண்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பள்ளத்தூர் செருபாலகாடு ஊராட்சியில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பவர் டில்லரின் செயல்முறை விளக்கத்தினையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்றுவரும் கொரோனா தடுப்பூசி முகாமினையும், வினியோக திட்டத்தின் கீழ் அங்காடிகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் தரத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது சேதுபாவாசத்திரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் திரு.முத்துமாணிக்கம் பட்டுக்கோட்டை, வட்டாட்சியர் திரு.கனேஷ் வரன், பேராவூரணி வட்டாட்சியர் திரு.சுகுமார் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு கோபாலகிருஷ்ணன், திரு. கிருஷ்ணமூர்த்தி. ஒன்றிய உதவி பொறியாளர் திரு. அருண், திரு.கண்ணன் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் திரு.பரிமேலழகன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**